**<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>**
**<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>**

2018–ம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் 27–ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**<u>மன்றப்பொருள். 1.</u>** இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திரு.வி.தர்மராஜ் 30.04.2018 அன்று ஓய்வு பெற்று விட்ட காரணத்தால், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் (SPF) தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்ககுமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு.வி.தர்மராஜ் துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1989–90 முதல் சிறப்பு சேமநல நிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள். | 26.2.1990 |
| 2 | ஓய்வு பெற்ற நாள் | 30.04.2018 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம்/வருடம் | 4/2018 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/– |
| 6 | 01.08.1996 முதல் 30.04.2018 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | ரூ.17796/– |
| 7 | நகராட்சி அரசு பங்கு தொகை | ரூ,10000/– |
| | மொத்தம் | ரூ.30756/– |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு. திரு.வி.தர்மராஜ் துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.2960/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை **ரூ.17796/–**ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ.10000/– சேர்த்து மொத்தம் ரூ. 30756/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண்.1559/2018/பி2</u>**

**<u>தீர்மான எண் : 173 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றப்பொருள். 2 .</u>** அரசாணை எண். 73 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (MA.IV) துறை, நாள்.19.7.2018ல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய அனைத்து நகராட்சிகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டது. அதில் ,குடியிருப்புகளுக்கு 50%க்குள் வரி நிர்ணயக்கவும்,

1. வாடகை குடியிருப்புகளுக்கு 100% க்குள் வரி நிர்ணயக்கவும் மற்றும்
2. குடியிருப்பு அல்லாத வீடுகளுக்கு 100%க்குள் வரி நிர்ணயக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1.04.2018 முதல் அனைத்து நகராட்சிகளிலும் சொத்துவரி பொது சீராய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மேலும், அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கும் ( MA.IV) துறை , நாள். 26.07.2018 அன்று வெளியிடப்பட்ட அரசாணையில் வாடகை குடியிருப்புகளுக்கு மட்டும் 100% என்பதை 50% என திருத்தம் செய்து குறைக்க அரசாணை வெளியிடப்பட்டது.

எனவே, மேற்கண்ட அரசாணைகளை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அரசாணையின் மீது நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. சுய மதிப்பீட்டுத் தாள், விண்ணப்பம், மன்றம் செய்தித்தாளில் விளம்பரம், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு ஏற்படும் செலவினத்தை பொது நிதியில் செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3205/2018/அ1**

**<u>தீர்மான எண் : 174 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்தும் , செலவினத்திற்கும் அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள். 3 .</u>** நெல்லிக்குப்பம் நகரரட்சி எல்லைக்குட்பட்ட வருவாய் கிராமங்களின் வரைபடங்கள் (வார்டுகள் A,B,C,D) மிகவும் பழுதடைந்து மோசமான நிலையிலும், புலத்தணிக்கை செய்ய முடியாத நிலையிலும் உள்ளது. அதனால் பொதுமக்களின் கோரிக்கைகள்பரிசீலனை செய்யவும், அரசின் திட்டங்கள் தயார் செய்யவும் இயலாத நிலை உள்ளது. எனவே, மத்திய நில அளவைத்துறை, சென்னை, இணை இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதில் மேற்கண்ட வார்டுகள் A,B,C,Dயில் தற்போது,

வார்டு–C பிளாக் = 2/1,4/1,6/1,11/2,13/1,17/1,20/1 = **8 தாட்கள்**

வார்டு–D பிளாக் = 5/1,10/1,11/1,17/1,19/1,21/1,22/2,26/2,27/1,28/1,29/1,30/1,32/1,
33/1,35/1,36/3,37/2 = **22 தாட்கள் (Ladder உடன்)**

உள்ளது எனவும், மேற்கண்ட வரைபடங்களைப் பெற்றுக் கொள்ள தாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் மொத்தம் 30 தாட்களுக்கு (30 x 200 = 6000 ரூபாய் ஆறாயிரம் மட்டும்) நிர்வாக அலுவலர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை–5 என்ற முகவரிக்கு வரைவோலை மூலம் செலுத்தி வரைபட நகல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினம் ரூ. 6000/–ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க. எண்.180/2017/எப்1</u>**

**<u>தீர்மான எண் : 175 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள். 4 .</u>** இந்நகராட்சியின் 2015–16 மற்றும் 2016–17ம் ஆண்டு தணிக்கை பத்தி மற்றும் தணிக்கை குறிப்புகளில், இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 4016–3401001, 4017–3401002, 4018–3402001, 4019–3403001 மற்றும் 4020–3401003 தலைப்புகளில் உள்ள வைப்புத் தொகைகள், அரசாணை எண் 514 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 21.03.73 மற்றும் நகராட்சிகள் நடைமுறை நூல் தொகுதி I பத்தி 86 ன் கீழ் உள்ள விதிகள் 7 மற்றும் 8 ன்படி மூன்று வருட காலமாக உரிமை கோரப்படாமல் உள்ள வைப்புத்தொகை சம்பந்தப்பட்ட வரவினத் தலைப்பின் கீழ் வரவாக எடுக்கப்பட்டு வைப்புத்தொகை பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும். இவ்வினங்கள் காலம் கடந்த வைப்புப்பதிவேட்டிற்கு (Lapsed Deposit) கொண்டு செல்லப்பட வேண்டும்.

வைப்புத் தொகை கணக்கில் உள்ள தொகைகள், வைப்புத் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்ட நாளிலிருந்து 9 ஆண்டுகளுக்குப்பின் சட்ட விதிகளின்படி மீள சம்பந்தப்பட்டவர்களுக்கும் வழங்க இயலாது என்பதால் இத்தொகையினை நகராட்சியின் பொது நிதியில் பழைய கணக்கு தலைப்பு 1045–புதிய கணக்கு தலைப்பு 1808001 கணக்கு தலைப்பில் நிர்வாக வரவினமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதன்படி 2017–18ம் நிதியாண்டில் 2008–09ம் ஆண்டிற்கு முன் பெறப்பட்ட அனைத்து வைப்பு தொகைகளையும்

நிர்வாக வரவினமாக எடுக்கப்பட்டு அதன் விபரத்தினை சரிபார்த்திட கோப்பு மற்றும் பதிவேடுகள் தணிக்கைக்கு காண்பிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வைப்புத் தொகை தலைப்பில் உள்ள அனைத்து இனங்களுக்கும் காலங்கடந்த அதாவது **2018–19**ம் நிதியாண்டில் **2009–10**ம் ஆண்டிற்கு முன் பெறப்பட்ட அனைத்து **(4016–3401001, 4017–3401002, 4019–3403001, 4020–3401003)** வைப்புத் தொகைகளையும் **(1984–85** முதல் **2008–09** வரை) நிர்வாக வரவினமாக எடுக்கவும், **2009–10** முதல் **2014–15**ம் ஆண்டு வரை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் **1074– 1801101** ல் வரவெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர் வைப்புத் தொகை செலுத்திய / பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை கோரி பெறப்படவில்லை என உறுதி செய்யப்பட்ட பின்னர் உரிய மன்ற ஒப்புதல் பெறப்பட்டு அன்னாருக்கு அளிக்கலாம்.

| வருடம் | நிர்வாக வரவினமாக **1045– 1808001**ல் எடுக்கப்படவேண்டியது | | | |
|---|---|---|---|---|
| | **4016–3401001** | **4017–3401002** | **4019–3403001** | **4020–3401003** |
| 1984-1985 | 300.00 | - | 70.00 | 1816.19 |
| 1985-1986 | 0.00 | - | - | 57247.05 |
| 1986-1987 | 881.00 | - | - | 9715.00 |
| 1987-1988 | 260.00 | 390.00 | - | 120739.95 |
| 1988-1989 | 1984.00 | - | 200.00 | 5328.55 |
| 1989-1990 | 575.00 | 600.00 | 150.00 | 43003.29 |
| 1990-1991 | 1083.00 | 119.40 | - | 10075.35 |
| 1991-1992 | 3835.00 | - | 400.00 | 177882.50 |
| 1992-1993 | 1616.00 | - | - | 103639.00 |
| 1993-1994 | 1200.00 | 1200.00 | 2000.00 | 418457.75 |
| 1994-1995 | 2886.00 | - | - | 26072.00 |
| 1995-1996 | 4450.00 | 300.00 | - | 17292.45 |
| 1996-1997 | 4987.00 | - | - | 6883.00 |
| 1997-1998 | 17908.00 | 350.00 | 1000.00 | 173841.89 |
| 1998-1999 | 13914.00 | 18420.00 | - | 678794.20 |
| 1999-2000 | 15875.00 | 4700.00 | - | 177812.38 |
| 2000-2001 | 63571.00 | 11978.00 | - | 12617.00 |
| 2001-2002 | 11215.00 | 1120.00 | - | 4540.00 |
| 2002-2003 | 17630.00 | 3900.00 | - | 1150.00 |
| 2003-2004 | 77780.00 | 350.00 | - | 1000.00 |
| 2004-2005 | 101538.00 | 740.00 | - | 500.00 |
| 2005-2006 | 204461.00 | 600.00 | - | - |
| 2006-2007 | 369485.00 | - | - | 2500.00 |
| 2007-2008 | 404724.00 | 6000.00 | - | - |
| 2008-2009 | 323548.00 | - | - | 429.00 |
| மொத்தம் | 1645706.00 | 50767.40 | 3820.00 | 2051336.55 |

| வருடம் | காலங்கடந்த தலைப்பில் **1074– 1801101** ற்கு மாற்றம் செய்யப்பட வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|---|
| | **4016–3401001** | **4017–3401002** | **4019–3403001** | **4020–3401003** |
| 2009-2010 | 340789.00 | - | - | 325.00 |
| 2010-2011 | 428879.00 | - | - | 3156.00 |
| 2011-2012 | 238805.00 | - | - | 56484.00 |
| 2012-2013 | 459443.00 | - | - | 112605.00 |
| 2013-2014 | 381310.00 | - | - | 296165.00 |
| 2014-2015 | 407082.00 | - | - | 3810.00 |
| மொத்தம் | 2256308.00 | - | - | 472545.00 |

அலுவலக குறிப்பு :-

பல்வேறு தலைப்பில் உள்ள மேற்கண்ட வைப்புத் தொகையினை உரிய காலங்கடந்த தலைப்பில் வைக்கவும், நிர்வாக வரவினமாக எடுக்க அனுமதிக்கலாம். 2015–16, 2016–17 மற்றும் 2017–18ம் நிதியாண்டில் வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்குத் தலைப்பு (4016–3401001, 4019–3403001, 4020–3401003) சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் கோரியதற்கிணங்க திரும்ப வழங்கப்பட்ட தொகைக்கு 2015–16ம் நிதியாண்டு தணிக்கை தடை பத்தி எண். 68ல் வழங்கப்பட்ட தொகைக்கு பின்னேற்பு வழங்கலாம். வைப்புத் தொகை கணக்கு தலைப்பு (4018–3402001) Lease Deposit மட்டும் நிர்வாக வரவாக எடுக்காமலும், அதே தலைப்பில் நிலுவை வைக்கலாம்.

**<u>தீர்மான எண் : 176 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள். 5 .</u>** உயிரியல் பல்வகை சட்டம் 2002 அத்தியாயம் (X) 41 (1 ) மற்றும் உயிரியல் பல்வகை விதிகள் 2004 மற்றும் உயிரியல் பல்வகை விதிகள் 2017 பிரிவு 20, அரசாணை (நிலை) எண். 137 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (FR5) துறை நாள். 09.11.2017ன் படி, நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் பல்லுயிர் மேலாண்மை குழு கீழ்க்கண்ட நபர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்திடவும்.

| | |
|---|---|
| குழு தலைவர் | தனி அலுவலர் / நகர் மன்றத் தலைவர் நெல்லிக்குப்பம் நகராட்சி |
| குழு உறுப்பினர்கள் | 1) திரு. ரோஸ்கண்ணன், வஜீர்கான் தெரு, நெல்லிக்குப்பம்<br>2) திரு.கே.என்.முருகன், வைத்தியநாதன் தெரு, நெல்லிக்குப்பம்<br>3) திரு.எம்.முருகானந்தம், 398, மெயின் ரோடு, நெல்லிக்குப்பம்<br>4) திரு.என்.சந்திரசேகர், அண்ணா நகர், நெல்லிக்குப்பம்<br>5) திருமதி.எஸ்.பிரேமா, ஜானகிராமன் நகர், நெல்லிக்குப்பம்<br>6) திருமதி. எம்.மலர்விழி, அம்பேத்கார் நகர், மேல்பாதி, நெல்லிக்குப்பம். |

மேலும், உள்ளாட்சி அமைப்பில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆறு அரசு துறை சார்ந்த வனத்துறை, விவசாயத்துறை, தோட்டகலைத் துறை, கால்நடை வளர்ப்பு துறை, கல்வி துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறைகளை சார்ந்தவர்களை உள்ளக்கிடக்கியதாக அமைக்கப்பட தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, கீழ்க்கண்ட அரசு துறை அலுவலர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதி பல்லுயிர் மேலாண்மை குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும்,

| | |
|---|---|
| 1) | வனவியல் நீட்டிப்பு அலுவலர், நெய்வேலி |
| 2) | உதவி இயக்குநர், விவசாயத்துறை, அண்ணாகிராமம் |
| 3) | துணை இயக்குநர், கால்நடை வளர்ப்புத் துறை, கடலூார் |
| 4) | வட்டார தொடக்க கல்வி அலுவலர், அண்ணாகிராமம் |
| 5) | வட்டார வளர்ச்சி அலுவலர், அண்ணாகிராமம் |
| 6) | நகராட்சி ஆணையாளர், நெல்லிக்குப்பம். |

மேலும், பண்ணுருட்டி சட்டமன்ற உறுப்பினர், கடலூார் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் பல்லுயிர் மேலாண்மை குழு கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்பதற்கும், மேலே குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் நான்கு முறை, மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்ற அளவில் கூட்டம் நடத்திடவும், மூன்று வருட காலத்திற்கு செயல்படுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :-

உயிரியல் பல்வகை சட்டம் 2002 அத்தியாயம் (X) 41 (1 ) மற்றும் உயிரியல் பல்வகை விதிகள் 2004 மற்றும் உயிரியல் பல்வகை விதிகள் 2017 பிரிவு 20, அரசாணை (நிலை) எண். 137 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (FR5) துறை நாள். 09.11.2017ன் படி, நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் பல்லுயிர் மேலாண்மை குழு அமைத்து ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் நான்கு முறை,

மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்ற அளவில் கூட்டம் நடத்திடவும், மூன்று வருட காலத்திற்கு பொறுப்புகளை நிர்ணயித்து செயல்பட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 177 அலுவலக குறிப்பினை ஏற்று பல்லுயிர் மேலாண்மை குழு அமைத்திட அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 6 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண். TN-31 AF 0781 டம்பர் பிளேசர் வாகனம் 11.09.2018 முதல் தகுதி சான்று(FC) பெற வேண்டியுள்ளதால், அதிலுள்ள பழுதுகளை நீக்கி தகுதி சான்று பெறாகும் தோராய செலவினம் ரூ.83,000/–ம் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.3582/2018/எச்1**

**தீர்மான எண் : 178 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 7 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண் TN-31 AF 1415 Tipper Lorry வாகனம் 11.09.2018 முதல் தகுதி சான்று(FC) பெற வேண்டியுள்ளதால் அதிலுள்ள பழுதுகளை நீக்கி தகுதி சான்று பெறாகும் தோராய செலவினம் ரூ.88,000/–ம் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் .

**கோப்பு எண்.3602/2018/எச்1**

**தீர்மான எண் : 179 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 8 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு அவர்களின் ஆகஸ்ட் – 2018 மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

**கோப்பு எண் . 3792/2018/இ1**

**தீர்மான எண் : 180 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**<u>மன்றப்பொருள்</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு அவர்களின் செப்டம்பர் – 2018 மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

<u>கோப்பு எண் . 3792/2018/இ1</u>

நகராட்சி பொறியாளர் ஆணையாளர் (கூபொ) (ம) தனி அலுவலர்